**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 31.05.2019 வெள்ளிக்கிழமை    நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 31.05.2019

**மன்றப்பொருள்: 1**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொளள் 41 டி.பி.சி. பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வீடுகள் தொழில் நிறுவனங்களில் சேமித்து வைத்துள்ள தண்ணீரில் கொசுப்புழு லார்வா உள்ளதா என்று கண்டறிந்து அழிக்கப்பட்டு வருகிறது. அப்பணியில் 4 துப்புரவு பணியாளர் மேற்பார்வையாளர்கள், 2 துப்புரவு ஆய்வாளர்கள் ஈடுபட்டு பணிகள் நடைபெறுகிறது. மேலும், அந்த பணிக்கு தேவையான எழுது பொருட்கள் விநியோகம் செய்த ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு தொகை ரூ. 15,150/—யை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு:—**
1).மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)—ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 957/2014/எச்.1)

---

**மன்றப்பொருள்: 2**

இந்நகராட்சிக்குச் சொந்தமான உ.வாடிப்பட்டி உரக்கிடங்கில் குப்பைகளை கொட்ட முடியாததால் HITATCHI வாகனம் மூலம் குப்பைகளை கொட்ட இடவசதி செய்து தர வேண்டியும் அதற்கான தோராய செலவினம் ரூ. 40,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கு. மேலும், அதற்கான செலவினம் ரூ. 40,000/— மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:—**
1).மன்றம் அனுமதிக்கலாம்.
2). நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15—ன்கீழ் செலவினங்கள் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 845/2014/எச்.1)

---

**மன்றப்பொருள்: 3**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் டி.என்.58 ஏஜி.3449—ல் தற்போது நான்கு டோர் பவர் வின்டோ ரிப்பேர் ஆனதால் டோர் கிளாஸ் அடைக்க முடியாததாலும், ரேடியேட்டர் டெம்பரேசர் கூடுவதால் இஞ்சில் அவ்வப்போது நின்று விடுகிறது. அதனால் வாகனத்தில் மேலும் பழுது ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் திரு. பி.சின்னச்சாமி ஓட்டுநர் தனது சொந்த செலவில் ரூ. 2500/— செலவு செய்துள்ளார். மேற்படி தொகை ரூ. 2500/—ஐ திரு. பி.சின்னச்சாமி ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு:—**
1).மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன்கீழ் செலவினங்கள் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 254/2013/எச்.1)

**<u>மன்றப்பொருள்: 4</u>**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூரில் நடைபெறும் பணி ஒய்வு குறித்த திட்டமிடுதல் பயிற்சிக்கு பயிற்சி கட்டணம் ரூ. 3000/– வழங்க மன்றம் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2293/2016/சி1)

---

**<u>மன்றப்பொருள்: 5</u>**

இந்நகராட்சி பொதுச்சுகாதார வாகனம் எண். டி.என்.58, ஏ.டபுள்யூ.3247–க்கு 2019–20–ம் ஆண்டுக்கு இன்சூரன்ஸ் புதுப்பிக்க வேண்டியுள்ளது. மேலும், 28.5.2019 உடன் இன்சூரன்ஸ் முடிவடைவதால் 2019–20–ம் ஆண்டுக்குரிய இன்சூரன்ஸ் தொகை ரூ. 32,446/–ஐ (ரூபாய் முப்பத்து இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மட்டும்) United India Insurance Company Limited நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2),. மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி 1920 பிரிவு (15)–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 2217/2016/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்: 6</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–10, கனரா பேங்க் தெருவில் உள்ள சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளது. பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, புதியதாக அப்பகுதியில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 7.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 7</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் BOV மற்றும் LCV வாகனங்கள் புதியதாக வாங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனங்களை பாதுகாக்கும் பொருட்டு பேருந்து நிலைய நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்திற்குள் சுற்றுச்சுவருடன் கூடிய மேற்கூரை அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 7.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 8</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் பொதுச்சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் உரமாகவும் மக்காத பிளாஸ்டிக் பைகள், பேப்பர் மற்றும் துணிகள் ஆகியவற்றை பேலிங் செய்து வைக்க புதியதாக Llydralic Balling Machine வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 4.35 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.
2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 9</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வார்டு–7,8,9,10 மற்றும் 13 ஆகிய வார்டுகளில் குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு கிடைக்க புதியதாக குடிநீர் குழாய் பதிக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.
2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை குடிநீர் விநியோக நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 10</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வார்டு–15 சத்யா நகரில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேசத்தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.
2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை குடிநீர் விநியோக நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 11</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வார்டு–16,18,20–ல் உள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள் செல்வதற்கு இடையூறாக உள்ளது. மேலும், மழைநீர் செல்வதற்கு வழியில்லாமல் சாலையில் தேங்கியுள்ளது. ஏனவே, மேற்கண்ட இடத்தில் புதியதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.
2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 12</u>**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள பணியாளர்களுக்கும், பொருட்களுக்கும் பாதுகாப்பு நலன்கருதி கழிவறைகளில் கூடுதலான வசதிகள், தட்டோடு பதித்தல், வர்ணம் பூசுதல்

புதியதாக குளிர்சாதன அறை அமைத்தல் போன்ற பணிகளுக்கு உத்தேச செலவினம் ரூ. 9.98 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 13</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–22, செட்டிச்சியம்மன் கோவில் தெருவில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு தேவர் சிலை அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை குடிநீர் விநியோக நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 14</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–3, தேனி ரோட்டில் உள்ள பழைய உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio-Mining முறையில் பிரித்தெடுக்கப்படும் பணியை செய்வதற்கு மின்சாரம் தேவைப்படுகிறது. அப்பணிக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மின்சாதன உதிரி பாகங்கள் தேவைப்படுகின்றது. எனவே, புதியதாக மின் சாதன உதிரிபாகங்ளை விநியோகம் செய்யும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிபபீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2),. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள் :15</u>**

இந்நகராட்சி 2019–20–ம் ஆண்டு குடிநீர் வழஙகல் நிதியில் ஏப்ரல் 2019–ம் மாதம் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்த சரக்கு மற்றும் சேவை வரியினை ரூ. 1,600 மற்றும் திரு. எஸ்.எஸ்.சேதுராஜ், அவர்களுக்கு இணையத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் சேர்த்து ரூ. 2850/– ( ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) குடிநீர் நிதியில் இருந்து செலுத்தலாம். மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து வழங்கலாம்.

(ந.க.எண். 10990/2019/பி1)

---

**<u>மன்றப்பொருள் :16</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு 100 எச்.பி. மோட்டார்களை கொண்ட மோட்டார் அறை உள்ளது. எனவே, 100 எச்.பி. மோட்டார் அறையை பாதுகாக்கவும், மோட்டாரை இயக்கவும் இரவுக்கும் பகலுக்கும் சேர்த்து 4 பேர்களை கொண்டு காவல் பணி மேற்கொள்ளவும், வைகை பேரணையில் புதியதாக போடப்பட்டுள்ள மூன்று உறிஞ்சு கிணறுகளை இயக்க 10 எச்.பி. மோட்டார் 3 எண்ணம் கொண்ட ஒரு மோட்டார் அறை உள்ளது. இம்மோட்டார்களை இயக்கவும், பாதுகாக்கவும் 4 பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும், மேலும், உசிலம்பட்டி நகராட்சி பேருந்து வளாகத்திற்குள் உள்ள 4.00 இலட்சம் கொள்ளளவுள்ள இரண்டு நீர்த்தேக்கத்தொட்டி உள்ளது. இவ்வளாகத்தை பாதுகாக்கும் பொருட்டு ஒரு பணியாளர்களும் ஆக மொத்தம் 12 பணியாளர்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 1617/2018/இ2, நாள். 7.6.2018—ன்படி வாட்ச்மேன் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ. 324/—யை நிர்ணயம் செய்யப்பட்டு 1.7.2019 முதல் 3.9.2019 வரை ஆகும் உத்தேச செலவுனம் ரூ. 3.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிக்கான செலவின பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள் :17</u>**

உசிலம்பட்டி நகராட்சி தெருவிளக்கு பிரிவில் மின் சாதன உதிரி பொருட்களை சப்ளை செய்ய அவசர அவசியம் கருதி இப்பணியை மேற்கொண்ட M/s. மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோலர்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 99,940/—யை வழங்குவதையும் மன்றம் ஏற்கலாம்.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.